THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL

Thursday, the 27th March 1969.

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, Mr. Chairman (THE HON. THIRU M. A. MANICKAVELU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

MR. CHAIRMAN: We shall take up Short Notice Question 1 and Starred Question 245 together.

Tagore Centenary Theatre

*1 S. N. Q.—THIRU T. K. SHANMUGAM: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) the amount spent so far on Tagore Centenary Theatre; and

(b) the details of expenditure?

தாகூர் நினைவு மண்டபம்

திரு. டி. கே. சண்முகம்: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தாகூர் கலை அரங்கத்திற்கு இதுகாறும் எவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டிருக்கிறது?

(இ) எந்தெந்த வகையில் எதற்காக செலவிடப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ), (இ): 1969 பிப்ரவரி வரையில் செலவான தொகை குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

	ரூ.
1. தாகூர் நினைவுக் கலை அரங்கத்திற்கு முன்னோடி வரைபடங்களையும், படங்களையும் தயாரிப்பதற்கென ஆகிய செலவு.	10,000 00
2. தாகூர் நினைவுக் கலை அரங்கத்தைக் கட்டுவதற்கென கையகப்படுத்தப்பட்ட நிலத்துக்குரிய (நிலக் கையகப்படுத்தல் குறித்த) செலவு.	1,52,042 50
3. உட்புற அரங்கம் ஒன்றைக் கட்டுதல் (தாகூர் நூற்றாண்டு நினைவுக் கலை அரங்கம், நுங்கம்பாக்கம் (வேலைகள் குறித்த செலவு).	
(a) தாங்கும் கம்பங்களைப் பூமியில் இறக்கி கடைக்கால் போடுதல்.	1,74,197 00
(b) மேடை அமைப்பு	4,051 00
(c) ஆடை அணிகள் அறை	46,760 50

		ரூ.
(d) உட்புறத்தில் நீர்வழங்கு, கழிவுநீர் அகற்றும் ஏற்பாடுகள்.		5,046 24
(e) முழுநேரக காவல பணியாளை நியமித்தல் ..		5,771 72
(f) பிற கட்டிட வேலைகளை நிறைவேற்றல் ..		447 42
(g) தொகுப்பு உள் தலைப்பு		314 77
(h) மேற்பார்வையிடுவதற்கான சிறு செலவுகளும் சில்லறைச் செலவுகளும்.		13,904 29
	ரூ.	
(i) பொருள்கள் குறித்த கூடுதல் செலவுகள்.	(—) 1,943 20	
(j) பணியிடத்தில் உள்ள பொருள்களின் இருப்பு.	(—) 33,990 83	
	2,14,558 91	2,14,558 91

4. ஏற்கனவே கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்குக் கூடுதல் இழப்பீடு வழங்குவதற்கு ரூபாய் 1,23,858-14 ஒப்பளிக்கவும் திட்டமிட்டுள்ளது.

Tagore Centenary Theatre

* 245 Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of Thiru N. R. THIAGARAJAN): Will the Hon. the Minister for Education and Industries be pleased to state the present stage of the construction of Tagore Memorial Hall at Madras?

தாகூர் நினைவு மண்டபம்

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு (திரு. என். ஆர். தியாகராஜன் சார்பில்): மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

சென்னையில் தாகூர் நினைவு மண்டபம் கட்டுவது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சென்னை மாநகரில் தாகூர் நூற்றாண்டு நினைவு மண்டபம் என்னும் அரங்கை கட்டும் பணி 1961-ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. அரங்கப் பகுதிக்குக் கடைகால் இறக்கும் பணி **(pile foundation)** செய்து முடிக்கப்பட்டுள்ளது. தேசிய நெருக்கடியை முன்னிட்டுக் கட்டிடம் கட்டும் பணி தள்ளி வைக்கப்பட்டுள்ளது. அரங்கத்தைக் கட்டி முடிக்க முயற்சியெடுப்பது பற்றி அரசாங்கம் மும்முரமாக ஆலோசித்து வருகிறது.

திரு. டி. கே. சண்முகம் : தலைவர் அவர்களே, தாகூர் நினைவு மண்டபம் 5 லட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதுவரையில் செலவழிந்த தொகை 7 லட்சம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ரூ. 7 லட்சத்திற்கு செலவிடப்பட்டும் அங்கோ 9 சிறிய அறைகளைத்தவிர வேறுஒன்றும் இல்லை. பொட்டலாகத்தான் இருக்கிறது. அந்த 9 சிறிய அறைகளைக் கட்டுவதற்கு 7 லட்சம் செலவானது என்றால் இனி அந்த அரங்கம் முழுவதையும் கட்டுவதற்கு ரூ. 5 லட்சம் போதுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.